1982 மார்ச் 6]

*வினா எண். 394—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பொது மருத்துவமனையில் பிரேதங்களை எடுத்துச் செல்லும் வாகனப் பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக கூடுதல் வாகன வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) அரசு பொது மருத்துவ மனைக்கு கூடுதலாக பிண ஊர்தி வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை அரசினர் மருத்துவ மனையில் அளவுக்கு மிஞ்சிய பிணங்கள் அங்கே தேங்கிக் கிடக்கின்றன என்று போலீசார் அரசுக்கு தெரிவித்து, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அறிக்கை வந்திருக்கிறதா? அது மட்டுமல்ல, இறந்த பிணங்களை டாக்ஸிகளிலே கடத்திச் செல்வதாக அரசுக்கு புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, அங்கே அன் கிளெய்ம்ட் ஆக இருக்கிற பிணங்களைப் பற்றியது. அதைப் பொறுத்தவரையில் அதற்காக அன் - கிளெய்ம்ட்டாக எத்தனை நாட்கள் இருக்கவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறதோ, அத்தனை நாட்கள் இருக்கிறது. அப்போதும் கிளைமென்ட் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கிறோம். இரண்டாவது கேள்வி, டாக்ஸியைப் பொறுத்தவரையில் சில நேரங்களில் இப்படிப்பட்ட தகவல்கள் கிடைக்கின்றது. மாச்சுவரி வேன் செயல்படவில்லை என்றாலும், இல்லை செயல்படுவதாக இருந்தாலும். செயல்படவில்லை என்று சொல்லி டாக்ஸியிலே அனுப்புகிற மாதிரி புகார் சர்க்காருக்கு வந்து, உடனடியாக அதிகாரியை கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு அனுப்பி அங்குள்ள டிரைவர்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ட. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலுள்ள அரசு

பொது மருத்துவ மனைகளில் எத்தனை மார்சுவரி வேன்கள் இருக்கின்றன, எத்தனை வேன்கள் கூடுதலாக அரசு வழங்க இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்ன்மென்ட் ஜெனரல் ஆஸ்பத்திரியிலே 3 வண்டிகள் ; ஸ்டான்லி மருத்துவமனையில் 1 ; கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் 1 ; இராயப்பேட்டை மருத்துவ மனையில் 1. ஆகமொத்தம் 6 மார்ச்சுவரி வேன்கள் இருக்கின்றன. நாம் இன்னும் கூடுதலாக ஒரு வேன் புறநகர்ப் பகுதிக்கு மட்டும் என்று கேட்டிருக்கிறோம். நிதித்துறை தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தனியார் துறை, லையன்ஸ் கிளப் போன்ற ஸ்தாபனங்கள் மூலமாக ஏற்பாடு செய்வதற்காக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, பிணங்களை எடுத்துச் செல்வதற்கு 3 வேன்கள் அரசினர் பொது மருத்துவமனையிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நாம் எப்போது கேட்டாலும், வண்டி அவுட் ஆப் ஆர்டர் என்று சொல்கிறார்கள். அதற்கடுத்து, அப்படியே வண்டியிருந்தாலும் டிரைவர் இல்லை என்று சொல்வதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். அமைச்சர் அவர்களே இப்படிப்பட்ட கம்ப்ளெயின்ட் வந்திருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தனியார் வண்டிகளில் பிணத்தை எடுத்துக்கொண்டு போக வரமாட்டார்கள். அப்படியே வந்தாலும், 300, 400 ரூபாய் டிமாண்டு பண்ணுகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு வண்டிகளை அதிகமாக்குவதோடு, இருக்கின்ற வண்டிகளை உருப்படியாக வைத்துக்கொண்டு, அதிலே பணியாற்றுகின்ற டிரைவர், மற்றும் உள்ள ஊழியர்கள் எல்லாம் பிராம்ப்டாக வேலை செய்கிற அளவில் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் நிறைய இருக்கிறது. குறிப்பாக, துறைமுகத்திலே ஒருவர் இறந்து, அந்தப் பிணம் $1\frac{1}{2}$ நாட்களாக அங்கேயே இருந்தது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட ஒருவருடைய சம்பவங்களுக்குள் எல்லாம் போகக்கூடாது. புதிதாக மேலும், வண்டி போடப்படுமா என்று கேளுங்கள். இப்படிச் சொல்ல ஆரம்பித்தால், அவரவர்கள் சொந்தக்காரர்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்க முடியும். ஆகவே, இதை அனுமதிக்க முடியாது. உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குச் சுருக்கமாக, ஆனால்,

1982 மார்ச் 6]

தெளிவாக பதில் சொல்கிறேன். இந்த மார்ச்சுவரி வேனைப் பொறுத்த வரையில் ,இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாக இப் படித்தான் இருந்து வருகிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், அங்கே ஒரு ராக்கெட் மாதிரியாக மாண்புமிகு உறுப் பினர் சொல்லியிருக்கிறபடி, சில நேரங்களில் அங்கே வேன் இருந் தாலும்கூட, அங்கு டிரைவருக்கும் டாக்சிகாரர்களுக்கும் இடையே ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிற மாதிரி செய்தி வருகிறது.

பல இடங்களில் நாம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகளாக எப்படி திரு. பொன்னு ரங்கம் அவர்கள் ஒரு தொகுதியில் வேலை செய்து கொண்டிருக்கி றார்களோ அதைப்போல நானும் ஜெனரல் ஆஸ்பத்திரி தொகுதி யில் 10 ஆண்டுக் காலமாக வேலை செய்கிற காரணத்தால் இது போல ''கம்ப்ளெயின்ட்'' வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதில் என்ன சிக்கல் என்றால், உடனே விவரங்களுடன் கம்ப்ளெயின்ட் யாரும் கொடுப்பதில்லை. இருந்தாலும்கூட, அதற்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்காமல் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் கூறிய கருத்தின் அடிப் படையிலே அது இன்னும் தீவிரமாக கண்காணிக்கப்படும் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9–50]

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நகரங்களில் இருக்கக்கூடியவர்கள் மட்டும் பெரிய ஆஸ் பத்திரிகளில் மருத்துவம் பெற்று இறப்பது இல்லை. கிராமப் பகுதியிலேயிருந்து, 100 மைல்களுக்கு அப்பால் இருந்தெல் லாம் வந்து ட்ரீட்மென்ட் பெறக்கூடியவர்கள் இறந்துவிட்டால் கூட இதுபோன்ற பிரச்னைகள் வருகின்றன. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, புற நகரத்திற்கென்று வண்டி ஏற் படுத்திவிட்டால் பிரச்னை தீரும். அதற்காகத் தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

துவரங்குரிச்சி பகுதிகளில் நகரப் பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 395—திரு. மே. அ. இராசகுமார்: மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா துவரங் குரிச்சி நகர பஞ்சாயத்தை மையமாகக் கொண்டு துவரங்குரிச்சி பகுதிகளில் நகரப் பேருந்துவிடும் திட்டம் உள்ளதா ?